*1995 மார்ச் 28]*

அந்தக் குழுவின் பரிசீலனை மற்றும் பரிந்துரை அடிப்படையில் நிதியாதாரத்திற்கு ஏற்ப, மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும், அந்த நேரத்தில் உறுப்பினர் இங்கே தெரிவித்த கருத்துக்கள் அத்தனையும் கருத்தில் கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 138, டாக்டர் ஜெ. பரந்தாமன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

138—

**துத்திபட்டில் வேலூர் கூட்டுறவு வங்கி கிளை துவங்குதல்**

**35714*—**டாக்டர் ஜெ. பரந்தாமன் :**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) வட ஆற்காடு -அம்பேத்கர் மாவட்டம், வாணியம்பாடி வட்டம், துத்திபட்டில் வேலூர் கூட்டுறவு வங்கி கிளை ஒன்று திறக்கப்பட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது திறக்கப்படும்?

**மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன், கூட்டுறவுத் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அத்தகைய செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**டாக்டர் ஜெ. பரந்தாமன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவின் மற்ற மாநிலங்கள் அனைத்தும் சேர்ந்து திறமைக்காகப் பெறுகின்ற விருதுகளைக் காட்டிலும் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் தமிழகம் மட்டும் தனியாக அதிகமாக மிக அதிகமாக விருதுகளை கூடுதலாகப் பெரும் காலகட்டத்தில், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை, எக்ஸ், ஒய், இசட் என்ற எத்தனை பேர் சேர்ந்து எதிர்த்தாலும், டாக்டர் புரட்சித் தலைவி ஒருவரே தனியாக வெற்றி பெறுவது போல, போக்குவரத்து, எரிசக்தி, காற்றாலை மின்சாரம், சமூக நலம், உடல் ஊனமுற்றோர் நலம், வேளாண்மை, மக்கள் நல்வாழ்வு என்று எல்லாத் துறைகளும் விருது பெறும் இந்த நன்னாளில் தற்போது முதல்முறையாகக் கூட்டுறவு நிலவள வங்கியின் சிறந்த பணிக்காக இந்தியாவில் முதல் பரிசைப் பெறவைத்த புரட்சித் தலைவி

அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். துத்திப்பட்டு என்பது வளர்ந்துவரும் ஆம்பூரின் புறநகர். இந்த ஊரில் மட்டும் சுமார் 10,000 பேர் வசிக்கிறார்கள். சுற்றுப்புற ஊர்களில் சுமார் 5,000 பேர் வசிக்கிறார்கள். சுமார் 150 தோல் தொழிற்சாலைகளில் பணிபுரியும் 10,000 ஆயிரம் தொழிலாளர்களில் 7 ஆயிரம் பேர் பெண் தொழிலாளர்கள். பொதுமக்கள், வியாபாரிகள், வணிகர்கள் என அனைவரும் பயன்பெறமுடியும் என்பதாலும், வங்கி இலக்கு வங்கி சேமிப்பு சுலபமாகக் கிட்டும் என்பதாலும், பேரணாம்பட்டு தொகுதி நலம் கருதி, மலைபோல் வரும் சோதனைகளைப் பனிபோல் நீங்கச் செய்யும் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் நல்லாசியோடு, துத்திப்பட்டில் கூட்டுறவு வங்கியின் கிளையை அமைக்க அரசு மறுபரிசீலனை செய்து, அங்கே துவக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய கூட்டுறவு வங்கிக் கிளையை ஒரு பகுதியில் திறக்கவேண்டுமானால், அதற்குச் சில சட்ட திட்ட வரையறைகள் இருக்கின்றன. அதாவது ஒரு ஆண்டில் முதலாண்டில் 30 லட்சம் ரூபாய் வைப்பு நிதியை நாம் தேடித் தரவேண்டும். இரண்டாவது ஆண்டில் அந்த 30 லட்சத்திற்கு மேல் 5 லட்சம் ரூபாயை அதிகமாக்கிக் காட்டவேண்டும். அது மட்டுமல்ல, மூவாயிரத்திற்கு மேற்பட்ட தனிநபர்கள் கணக்குகள் வைத்து லேவாதேவி செய்யவேண்டும். இவைகள் அல்லாமல், அந்தப் பகுதியில் வேறு எந்தெந்த வங்கிகள் இருக்கின்றன, வணிக வங்கிகள் எத்தனை இருக்கின்றன என்பதையும் கணக்கில் எடுக்கவேண்டும். ஆக இத்தனையையும் பார்த்தபிறகு, அந்தப் பகுதியிலே வங்கிக் கிளை திறக்க ஏற்பாடு செய்ய வேண்டும். ஆனால் துத்திப்பட்டைப் பொறுத்தவரையில், அது மிகச் சிறிய கிராமம். அங்கே ஏறத்தாழ 400 குடும்பங்கள்தான் இருக்கின்றன. அதிலே 10,000 பேர்கள் இல்லை. மூவாயிரம் பேர்கள்தான் இருக்கின்றார்கள் என்று எனக்குக் குறிப்புகள் தரப்பட்டிருக்கின்றன. இதில் விவசாயிகள் மட்டும் 150 பேர், நிலமற்ற தொழிலாளர்கள் 2000 பேர். சிறு வியாபாரிகள் 200 பேர், மற்றவர்கள் 650 பேர் இருக்கின்றார்கள். அவர்கள் பெரும்பாலும் தோல் பதனிடும் தொழிற்சாலைப் பணியாளர்கள் ஆக இருக்கிறார்கள். அங்கே ஒரு புதிய மத்திய கூட்டுறவு வங்கிக் கிளை திறக்கவேண்டுமானால் அந்தக் கிளை தானாக நிற்கக்கூடிய நிலையில் இருக்காது என்பதால் அந்த வட்டாரத்தில் புதிய கூட்டுறவு வங்கிக் கிளையை திறக்க எந்தவிதமான வாய்ப்பும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.